மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வன வளம் பாதுகாத்தல், உயிரியல் பூங்கா அமைத்தல், வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஏற்படுத்துதல், தேக்கு மரத் தோட்டங்கள் நடவுதல், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தை வளர்த்து, இயற்கையைக் காத்து, மாசற்ற நிலையை உருவாக்கி, வளரும் தலைமுறையைக் காக்கும் வகையில், தமிழகத்தின் பசுமைப் போர்வையை அதிகரித்திட வனங்களுக்கு வெளியேயும் மரங்களை நட்டு பராமரிக்கும் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் இயற்கையாக வளரும் தேக்கு மரங்களும், தேக்கு மரத் தோட்டங்களும் சத்தியமங்கலம், சேலம், தேனி மற்றும் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் காணப்படுகின்றன. தற்போது காப்புக் காடுகளிலும், சரணாலயங்களிலும் தேக்கு மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால், காவிரி ஆற்றுப் படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனது முந்தைய ஆட்சிக்காலத்தில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளில் 16,050 எக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மக்களின் தேக்கு மரத் தேவையைக் கருத்தில்கொண்டும், அரசுக்கு வருவாயை ஈட்டும் வகையிலும், 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும். இதற்கென 39 கோடியே 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களைப் பராமரிப்பதற்கென இந்த ஆண்டு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

வன உயிரினங்களையும், பறவையினங்களையும் கண்டுகளிக்க, தமிழகத்தில் தற்போது வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா, குறும்பப்பட்டி மற்றும் அமிர்தியில் சிறிய உயிரினப் பூங்காக்கள் என நான்கு இடங்களில் வனத் துறையின்கீழ் மட்டுமே உயிரினப் பூங்காக்கள் உள்ளன. உயிரினப் பூங்காக்களை மேலும் உருவாக்கும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த உதயகிரி கோட்டை சுற்றுலா தலத்தில் 22.5 எக்டேர் பரப்பளவில் உயிரியல் பூங்கா ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புள்ளிமான், கடமான், வெளிர்மான், நீலகிரி கருமந்தி, இந்திய எறும்புத் தின்னி போன்ற 26 வகையான வனவிலங்குகள் இந்த உயிரியல் பூங்காவில் அமையப்பெறும்.

முற்பகல் 11-20

தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கவும், பெருமளவிலான பசுமையாக்குதல் திட்டத்தை நிறைவேற்றவும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதி உதவியோடு ஒரு மாபெரும் திட்டத்தினை 686 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடவும், திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும், திட்ட மேலாண்மை அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலகுக்கு சென்னை, வேளச்சேரியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலகக் கட்டடம் இந்த ஆண்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வனத் துறையில் சீருடைப் பணியாளர்களாக உள்ள வனவர், வனக் காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன்கூடிய வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகிய பதவிகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படும்போது, அவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு காவல் துறையிலுள்ள பல்வேறு பதவிகளுக்கான காலிப் பணியிடங்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்து நிரப்பும் நடைமுறையைப்போல் தமிழ்நாடு வனத் துறையிலும் வனவர், வனக் காப்பாளர், ஓட்டுநர்

உரிமத்துடன்கூடிய வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப் பணியிடங்களை நிரப்ப, மாநில அளவில் "தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்" ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஏறத்தாழ 75,000 எக்டேர் பரப்புள்ள காப்புக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளை தமிழ்நாடு வனத் துறையிடமிருந்து பெற்று, தைலத் தோட்டங்களையும், முந்திரித் தோட்டங்களையும் பராமரித்து வருகிறது. இக்கழகத்தின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில், இந்த ஆண்டு 4,500 எக்டேர் பரப்பில் 9 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் மரக்கூழ் தோட்டங்கள் நடவு செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், 800 எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் ஒட்டு முந்திரிக் கன்றுகள் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் நடவு செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்குத் தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர இடங்களில் அரசு வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, அதில் தேயிலைத் தோட்டங்களை அமைத்து, கடந்த 36 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம் 40 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி செய்தல், குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஈ) அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்களாக ஆக்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உலகம் ஒரு குடும்பம்" என்னும் உன்னதத் தத்துவத்தை அடைய உறுதுணையாக விளங்கும்